முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 623/2020

தேதி : 06–11–2023

(வா.சா.1) – நாகாத்தாள்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை :

வழக்குச் சொத்து எனக்கும், முன் பாத்தியஸ்தர்களுக்கும் பாத்தியப்பட்டதாக கூறி நான் பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 58/2006 வழக்கு 22.08.2016 தேதி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அதற்கு எதிராக நான் நடவடிக்கை எடுத்துள்ளேன். மேற்படி வழக்கின் தீர்ப்பாணை படி நான் இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வழக்குச் சொத்து சம்பந்தமாக 4–ம் பிரதிவாதி 15.02.2020 தேதி பிறப்பித்த உத்தரவின் மீது நான் எந்தவித மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் சரியல்ல. 22.06.2012 தேதிய பழனி நிர்வாக மாவட்ட பதிவாளர் அவர்களின் உத்தரவிற்கு எதிராக நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. 4–ம் பிரதிவாதி பிறப்பித்த உத்தரவு சட்டப்படி செல்லாது என்று பரிகாரம் கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு வழக்கு முன்னறிவிப்பு அனுப்பவில்லை என்றால் எனக்கு தெரியாது. 3 முதல் 5 பிரதிவாதிகள் இந்த வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர்கள் என்றும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்ய சட்டப்படி எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2023.11.06 16:38:42 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.